# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# *The reality of ploughing in Thirukkural*

***DrR.Jaisankar,*** *Associate Professor in Tamil (CDOE),Bharathidasan University, Thiruchirappalli, Tamil Nadu,India. ORCID : https://orcid.org/0000-0002-2959-6384*

***Abstract***

*This article has subjected Thiruvalluvar's agricultural thought to an evaluation methodology. The paper also describes the need to protect the resources of soil, water and air. The article highlights and also describes the need to restore the way of life of our ancestors who lived in harmony with nature. Farming can be made a valuable profession for them. From this, a correct understanding of farming should be created among the youth. The situation in which farmers are gradually losing their uniqueness due to natural disasters and the neglect of the planned bureaucracy has been described. We should understand the pain and suffering of farmers and encourage them without bias. If we combine the ancient traditions of farming with modern techniques and practice, farming will become a profession that the world admires and without laziness. The paper pointed out that, it is necessary for all of us to change our minds. This research article seeks to point out, following Valluvar's example, that farmers will be a blessing to the world.*

***Keywords:*** *Agriculture, Youth, Correct Understanding, Tradition,Modern Strategy, Mind Change.*

## திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்

**முனைவர் இரா.ஜெய்சங்கர், தமிழ்-இணைப்பேராசிரியர்**(CDOE),பாரதிதாசன் பல்கலைக்கழம் திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா. *ORCID : https://orcid.org/0000-0002-2959-6384*

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வுக்கட்டுரையில் திருவள்ளுவரின் வேளாண்மைச்சிந்தனை விளக்முறை, மதிப்பீட்டு முறைத்திறனாய்வுக்கு உட்படுத்தப்பபட்டுள்ளது. மேலும் மண், நீர், காற்று இவைகளின் வளத்தைப் பாதுகாத்தல். நமது முன்னோர்களின் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்வியல் நெறியை மீட்டுருவாக்கம் செய்தலின் அவசியம் விவரிக்கப்ப்பட்டுள்ளன. உழவுத்

தொழிலை மதிப்புமிக்கத் தொழிலாக மாற்ற முடியும். அதற்கு உழவுத் தொழில் குறித்த சரியான புரிதலை இளைஞர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும். இயற்கை சீற்றங்களாலும் திட்டமிட்ட அதிகாரவர்க்கத்தின் புறக்கணிப்புகளாலும் உழவர்கள் மெல்ல மெல்ல தங்களது தனித்துவத்தை இழந்துவரும் சூழல் விவரிக்கப்பட்டுள்ளது. உழவர்களின் வலியையும் வேதனையையும் உணர்ந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். உழவுத் தொழிலின் பாரம்பரிய மரபுகளையும் நவீன உத்தி முறைகளையும் ஒருங்கிணைத்து சோம்பலில்லாமல் உழவுத்தொழில் செய்தால் உழவுத் தொழில் உலகம் போற்றும் தொழிலாக மாறும். இதற்கு, நாம் அனைவரின் மனமும் மாற்றமடைதல் அவசியம் என்பதை இவ்வாய்வுக் கட்டுரைச் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும்,உழவர்கள் உலகத்திற்கு அச்சாணியாகத் திகழ்பவர்கள் என்பதை வள்ளுவர் வழிநின்றுச் சுட்டிக்காட்ட விழைகிறது இவ்வாய்வுக் கட்டுரை.

**திறவுச்சொற்கள் :** உழவுத் தொழில், இளைஞர்கள், சரியான புரிதல், பாரம்பரியம், நவீன உத்தி, மன மாற்றம்.

**முன்னுரை**

நமது நாட்டில் எழுபது விழுக்காட்டிற்கும் மேலான மக்கள், உழவு மற்றும் உழவு சார்ந்த வேளாண்மையை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். நமது தேசத் தந்தை காந்தியடிகள் உழவுத் தொழில் நமது தேசத்தின் முதுகெலும்பு என்றார். இவ்வளவு சிறப்பு மிக்க உழவுத்தொழிலின் மேன்மையை உணர்ந்த வள்ளுவப்பெருந்தகை, திருக்குறளில் உழவு என்னும் அதிகாரத்தில் பத்துக் குறளில் உழவுத் தொழிலின் சிறப்பைப் பதிவு செய்துள்ளார். நவீன நாகரிக உலகில் உழவுத் தொழில் நலிந்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே. அந்தவகையில் உழவுத்தொழிலின் சிறப்பையும் மாண்பையும் வள்ளுவர் பெருந்தகை எவ்வாறு தனது நூலில் பதிவு செய்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டுவது. அத்தொழிலானது தற்காலத்தில் நலிவடைந்தசூழலை விவரிப்பது, உழவர்களின் உண்மையான வாழ்வியல் நிலவரத்தை தெளிவுபடுத்துவது, அவர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கான அறிஞர்களின் சிந்தனைகளைச் சுட்டிக் காட்டுவது ஆகியவை இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. .

**உழவுத்தொழில் உன்னதமான தொழில்**

உலக மக்களால் பல தொழில்கள் மேற்கொள்ளப்பட்டாலும் உழவுத் தொழில் தனித்துவமானது. இத் தொழில் சிறப்பாக நடைபெற்றால்தான், உலக மக்கள்அனைவரும் பசி, பட்டினி இன்றி வாழமுடியும். உழவுத் தொழிலின் மகத்துவத்தை உணர்ந்த வள்ளுவப் பெருந்தகை, உழவு என்னும் அதிகாரத்தில் முதல் குறளில் உழவுத்தொழில் மற்ற தொழில்களைவிட முதன்மையான தொழில் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

**சுழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை (கு.1031).**

உலகில் பல தொழில்கள் நடைபெற்றாலும் அத்தொழில் செய்வோருக்கு உணவை உற்பத்தி செய்து கொடுப்பவர்கள் உழவர்கள். இதனால் உழவர்களுக்குப் பல துன்பங்கள் ஏற்பட்டாலும் உழவுத் தொழில் போல், சிறந்த தொழில், உலகில் இல்லை என்பதை வள்ளுவர், சுட்டிக்காட்டியிருப்பது மகிழத்தக்கதாக அமைகிறது. மேலும் மேற்காணும் குறளில் சுழன்றும், உழந்தும் ஆகிய இருசொற்கள் பொருள் பொதிந்தவையாக இருப்பதைக் காணமுடிகிறது. சுழன்றும் என்பதில் இப்புவியானது சுற்றுகிறது, இப்புவியில் வாழும் மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் பல தொழில்களைச் செய்து பம்பரமாகச் சுற்றுகின்றனர் என்று பொருள்கொள்ள இடமுள்ளது. சுழன்றும் என்ற உம்மைத் தொகையின் பொருளாக பல்வேறு தொழில்களை செய்து மக்கள் சுழன்று சுழன்று உழைத்தாலும் உழவுத் தொழிலின் பின்னே மற்ற தொழில்கள் நிலை பெறுகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. அதே சமயத்தில் வள்ளுவர் உழந்தும் என்ற சொல்லாடலில் உழவுத் தொழிலானது எளிய மகிழ்ச்சிகரமான தொழில் அல்ல என்பதை உணர்த்துவதாக அமைகிறது.. உழவுத் தொழிலானது விருப்பத்தோடு அகமகிழ்ச்சியோடு செய்யக்கூடிய தொழிலாக அன்றும் சரி, இன்றும் சரி இருந்ததில்லை என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. உழவர்கள் நிலத்தைவிட்டு வெளியேற மனமில்லாமல் அதிலேயே உழந்து வருகிறார்கள். இதனால் அவர்களது வாழ்வில் பொருளாதாரம் மேம்பாடு போதுமானதாக இல்லை என்பது எதார்த்த உண்மையாகும்.

**இந்தியா ஏழைகள் வாழும் செல்வந்த நாடு, இந்தியாவில் செம்மைபடுத்தப்படாத பக்குவப்படாத, வெளிச்சத்திற்கு வராத, பல திறமைகள் புதைந்து கிடப்பது போல உலகில் வேறு எங்கும் இல்லை. என்ற ஜாக் வெல்ச்*(மனசாட்சிஉதிர்கின்றது.ப.26).*** இக்கூற்றிக்கிணங்க இந்தியாவில் உழவர்கள் ஏழைகளாகவே உள்ளனர். அவர்கள், செம்மைப்படுத்தப்படவில்லை மாறாக அவர்கள் உதாசீனப்படுத்தப்பட்டு, சுரண்டப்படுகிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. ஆனால் உழவுத் தொழில் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் உணவுவழங்கக்கூடிய அற்புதமானதொழில் இத்தொழில்செய்வோரை ஊக்கப்படுத்துவது ஒவ்வொருவரின் கடைமையாக இருக்கவேண்டும்.

**உழவுத் தொழிலின் அடிப்படை**

உழவர்கள், பருவ மழை பெய்தவுடன் நிலத்தை ஆழமாக உழுதல் வேண்டும். பின்பு ஒரு பலம் புழுதி கால் பலம் புழுதி ஆகும் வரை உழுது, நிலத்தைக் காயவிட வேண்டும். பின்பு நிலத்தை ஆழமாக உழவேண்டும். அவ்வாறு செய்தால் நிலத்திற்குப் கைப்பிடி

எருவுகூட இட வேண்டாம், இதுவே உழவுத் தொழிலின் அடிப்படை என்பதை வள்ளுவர் உழவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். உழவு மாடுகளை வைத்து, உழவர்கள் விவசாயம் செய்த நிலை படிப்படியாகக் குறைந்து, தற்காலத்தில் இயந்திரங்கள் மூலம் உழவுத்தொழில் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு செய்வதனால் பல சாதகங்களும் பாதகங்களும் நிலவி வருகிறது. காலச்சக்கரத்தின் மாற்றத்தை ஏற்பதும் மறுப்பதும் உழவர்களின் முடிவுகளாக இருக்கட்டும். மேலும், நிலத்தை உழுவது நல்லது. அதைவிட எரு இடுதல் சிறந்தது.. பின்பு பயிர்களை வளர விடாமல் தடுக்கும் களைகளை அகற்ற வேண்டும். தண்ணீரை சரியான நேரத்தில் சரியான அளவில் பயிர்களுக்கு பாய்ச்ச வேண்டும். பின்பு மிகக் கவனத்துடன் விளைந்த பயிர்களை விலங்குகள், பறவைகள், எலிகள், பகைவர்கள், திருடர்கள் இவைகளால் சேதாரம் ஆகாமல் பாதுகாப்பது சிறப்பானது என்பதை, உழவுத் தொழிலின் அடிப்படைத் தத்துவங்களாக வள்ளுவர் சுட்டிக் காட்டியிருப்பது வியக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

**ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்**

**நீரினும் நன்ற அதன் காப்பு (கு.1038).**

உழுதல், உரமிடுதல், களைபறித்தல், நீர்பாய்ச்சல், காத்தல் ஒன்றை விட ஒன்று சிறந்தது என்பதை பதிவுசெய்துள்ளார். உற்பத்தியை பெருக்குவது மட்டும் முக்கியம் அல்ல, அதைப் பாதுகாத்து வைப்பது மிக முக்கியமானது என்பதை வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார். சுதந்திரம் அடைந்து **75** ஆண்டுகள் கடந்து விட்டோம், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை செய்து வெற்றிபெறுகிறோம். ஆனால், உழவர்கள் உற்பத்தி செய்த பொருளைப் பாதுகாக்க போதுமான அளவு தானிய குடோன்கள் இல்லை. அவை ; வெயில், மழையில் நனைந்து பாழாகப் போவது தொடர்கதையாகவே உள்ளது. போதுமான அளவு தானியம் மற்றும் காய்கறி குடோன்களை அமைத்து உழவர்களுக்கு கட்டுப்படியான விலையில் பொருள்களை விற்க வழிவகை செய்து கொடுப்பதுதான் உண்மையான செயல் திட்டமாக இருக்கும். அப்படிச் செய்தால் உழவர்களின் வாழ்வு மேம்பாடு அடையும்.

**வரலாறு என்பது பழம்பெருமை பேசுவது மட்டும் அல்ல, வரலாற்றுப் பாதையால் நாம் சந்தித்த சவால்களை, அவற்றை நாம் எதிர்கொண்ட விதம். நாம் இழைத்த தவறுகள், அவற்றால் அடைந்த பின்னடைவுகள் , அவற்றின் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு உணர்த்தும் படிப்பினைகள், கற்பிதங்கள், வழிகாட்டுதல்கள் ஆகியவை வரலாற்றிஅதிக முக்கியப் பணிகளாகும். இப்படிப்பினைகள் வளமான எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கான வலிமையையும் ஆற்றலையும் ஒரு சமூகத்திற்குக் கற்றுத் தருகின்றன. நிலமும், நீரும், காற்றும்,**

**மண்ணும், கடலும், மலையும் நம் உரிமைச் சொத்து அவற்றைப் பாதுகாத்து, மேம்படுத்தி எதிர்காலத் தலைமுறையினரிடம் ஒப்படைக்கும் தலையாய பொறுப்பு நம்முடையதாகும்.( மறப்பது மனிதனின் இயல்பு நினைவுபடுத்துவது வரலாற்றின் கடமை, ப. 70).** இச்சிந்தனையானது வள்ளுவரின் உழவுகுறித்த சிந்தனையோடு ஒப்புநோக்கத்தக்கதாக அமைகிறது

**உழவர்கள் தொண்டுள்ளம் கொண்டவர்கள்**

உழவுத் தொழில் செய்வோர் பெரிதும் நம்பியிருப்பது இயற்கையை. இயற்கை சாதகமாக அமைந்தால் உழவுத் தொழில் சிறப்பாக அமையும். மேலும் உழவர்கள் மற்ற தொழில் செய்வோர் போல உழவர்கள் லாபநோக்குடன் தொழில் செய்வோர் அல்ல. பிற தொழில் செய்வோரைத் தாங்கிக்கொள்வதால் உழவர்கள் உலக மக்களுக்கு அச்சாணி போன்றவர்கள் என்று உழவர்களை வள்ளுவர் முதன்மைப்படுத்தியுள்ளார்.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணி (கு.1032).**

உலகமக்களுக்கு அச்சாணியாகத் திகழ்பவர்களைப் பிறத்தொழில் செய்வோர்கள் மதிபோடும் மரியாதையுடனும் நடத்த வேண்டும். ஆனால்: 1. பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பு 2. உலகமயமாக்கல் கொள்கைகளின் தாக்கம் 3. உலகமே வணிக சந்தையாக மாறிப்போன சூழல் 4. கணினி தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சி இவைகள் அனைத்தும் உழவுத் தொழில் செய்வோரை உதாசீனப்படுத்திவிட்டது. அதாவது உடல் உழைப்புகளுக்கு மரியாதை அளிக்காமல் உடல் உழைப்பு அல்லாத தந்திர உத்தி முறைகளுக்கும் போலித்தனமான செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் பன்னாட்டு நிறுவனங்களின் சூழ்ச்சியாலும் திட்டமிட்ட புறக்கணிப்பாளும். உழவர்கள் பாரம்பரியமாகப் பாதுகாத்துவைத்த விதை நெல்,தானியங்களைச் காசு கொடுத்து வாங்கும் சூழலுக்குத் தள்ளி, அவற்றிலிருந்து விதை நெல் எடுக்காதவாறு மரபணு மாற்றம் செய்து விட்டனர். இதனால் உழவர்கள் படிப்படியாக தற்சார்பையிழந்து கடன்காரனாகி, கையேந்தி நிற்கின்றனர்.

**உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே (மணிமேகலை, ப.20)**

தமிழ்ச் சமூகம் உழவர்களைப் பசிப்பிணி போக்கும் மருத்துவராகப் போற்றியுள்ளது. தற்காலத்தில் உழவுத் தொழில் வெறுத்து ஒதுக்கக் கூடிய தொழிலாக மாறியுள்ளது. **விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியானது, ஒரு உதவாக்கரை சொகுசு வர்க்கத்தை உருவாக்கி ஒடுக்கு முறைக்கும், அநீதிக்கும்,ஆடம்பரத்திற்கும் இட்டுச்செல்லும் (மனசாட்சி உதிர்கின்றது, ப.25). என்ற ரூசோவின் சிந்தனையானது** உழவர்களின் உடல் உழைப்பு மருதளிக்கப்படும் சூழலில் கவனிக்கத்தக்கதாக அமைகிறது.உழவர்கள், மழை, வெயில் என்று பாராமல் வியர்வை சிந்தி,

பாடுபட்டு உழைத்து, தானும் உண்டு பிறரை உண்பித்து வாழக்கூடியவர்கள். அதனால் தான் வள்ளுவர் உழவர்களை உரிமையோடு வாழக்கூடியவர்கள் என்றும் மற்றவர்கள் அவர்களைத் தொழுது வணங்கி பின் செல்லக்கூடியவர்கள் என்றும் கூறியிருப்பது வள்ளுவரின் மனசாட்சியை அறியும் விதமாக அமைகிறது.

**உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்**

**தொழுது உண்டு பின் செல் பவர் (கு.1033).**

உழவர்கள் கடினமாக உழைத்து உற்பத்தி செய்த பொருளை, கட்டுப்படியான விலைக்கு விற்க முடியவில்லை. மேலும் உற்பத்தி பொருளைப் பாதுகாத்து வைக்கப் போதுமான வசதிகளும் இல்லை. வறட்சியாலும் மழையாலும் பாதிக்கப்பட்டு அவர்கள் படும் இன்னலுக்கு அளவே இல்லை. இடைத்தரகர்கள் பொருட்களை பதுக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி லாபம் ஈட்டுவதை மனசாட்சி இல்லாமல் செய்து வருகின்றனர்.. **இன்று நாம் வாழும் உலகம் சந்தை உலகம். லாபம் பார்க்கும் உலகம். அறம் இழந்த உலகம். அனைத்தும் சந்தைப்படுத்தப்பட்டு விட்டது. அரசனாலும் சரி, அரசியலானாலும் சரி, ஆளுகையானாலும் சரி, கலாச்சாரமானாலும் சரி, ஆன்மீகமானாலும் சரி, குடும்பமானாலும் சரி. அனைத்தும் சந்தைப்படுத்தப் பட்டுவிட்டது. இவைகளில் சேவை மறக்கடிக்கப்பட்டு, லாபம்ஈட்டுதல் சிந்தனை வலுவாக உருவாக்கப்பட்டு விட்டது. இவை அனைத்திலும் சேவை என்பது மட்டும் மறக்கடிக்கப்படவில்லை, ஆனால், அறம் முற்றிலுமாக மறக்கடிக்கப்பட்டு விட்டது,(தேடுவோம் மாற்றத்திற்கான இளைஞர்களை,ப.40)** இக்கருதியலானது, தற்கால வாழ்வியலின் குறுக்குவெட்டுத்தோற்றத்தைப் புலப்படுத்துகிறது. எனவே உழவர்கள் காலதிற்கு ஏற்ப தங்களைப் புதுபித்துக் கொண்டு தொழில்செய்வது காலச்சக்கரத்தில் நிலைத்திருக்க வழிவகுக்கும்.

**நல்லாட்சியும் உழவுத் தொழிலும்**

நல்லாட்சிக்கும் உழவுத் தொழிலுக்கும் என்ன தொடர்பு என்று கேட்கலாம், உழவர்கள் சிறப்பாக உழவுத்தொழில் செய்வதனால், நாட்டில் வறுமை ஒழியும், வறுமை இல்லை எனில், மக்கள், நோய், நொடி இல்லாமல், மகிழ்ச்சியாக வாழ்வார்கள். இதனால் நல்லாட்சி மலரும். எனவே, உழவர்கள் சிறந்த ஆட்சியை கொடுப்பதற்குக் காரணகர்த்தாவாக உள்ளனர். மேலும், வறுமையில் வாடும் பிற நாட்டவர்களுக்கு உணவு கொடுத்து உதவுவதனால் அந்த நாட்டு அரசாட்சி முறை தங்கள் நாட்டு அரசர்களுடைய குடையின் கீழ் வாழக்கூடிய பெருமை உழவர்களால் கிடைக்கிறது என்பதை ஆணித்தரமாக வள்ளுவர் கூறியிருப்பது மகிழத்தக்கது.**வரப்பு உயர நீர் உயரம், நீர் உயர நெல் உயரும்,நெல் உயர குடி**

**உயரும்,குடி உயர கோன் உயரும். என்ற** ஔவையாரின் பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கவையாக அமைகிறது.

**உழவும் துறவும்**

உழவர்கள், தம் முயற்சியால் உணவுப் பொருளை விளைவித்து உண்ணக்கூடிய வர்கள். இதனால் உழவர்களுக்கு இயல்பாகவே ஈகை குணம் அமைந்திருக்கும்.மேலும் அவர்கள் எதையும் மறைத்து வைத்து உண்ண மாட்டார்கள். அதைப்போன்று, எவரிடமும் எதிர்பார்த்து இரந்து நிற்க மாட்டார்கள். இதனை வள்ளுவர் தனது 1035 - ஆம் குறலில் சுட்டிக்காட்டியுள்ளார். உழவுத் தொழில் செய்வோர் ஏதோ ஒரு சூழ்நிலைக் காரணமாக தங்களுடைய உழவுத் தொழிலைச் செய்யாமல் விட்டுவிட்டால், இவ்வுலகம் என்னவாகும் என்று யோசித்த வள்ளுவர் கூறுகிறார், இல்லறம் நல்லறமாக அமையாது. ஆசைகளை முற்றும் துறந்த துறவிகள் கூட அவர்களுடைய அறத்தில் நின்று செயல்பட இயலாது என்று கூறுகிறார். அதாவது, உழவுத் தொழில் முடங்கி விட்டாள், இவ்மனித சமூகம் மிகப்பெரிய அழிவை சந்திக்கும் என்பதை துறவிகளுடன் ஒப்பிட்டு, உழவுத்தொழிலின் முக்கியத்துவத்தை, மனித சமூகத்திற்கு வள்ளுவர் உணர்த்தியிருப்பது எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய ஒன்றாக உள்ளது .

**உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூம்**
**விட்டேம்என் பார்க்கும் நிலை (கு.1036).**

வள்ளுவரின் எச்சரிக்கையைக் கவனத்தில் கொண்டு, பிற தொழில் செய்வோர் உழவர்களுக்குரிய மதிப்பும், மரியாதையும் அளிக்க வேண்டும். அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த உறுதிஏற்க வேண்டும். இல்லையேல் அனைத்துத் தரப்பு மக்களும் ஒட்டுமொத்த வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். மேலும் திரைப்படத்திற்கும், கிரிக்கெட்டிற்கும் இளைஞர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தில் கால்வாசியாவது உழவுத் தொழில் குறித்த புரிதலுக்கும் கொடுத்தால் உழவர்கள் வாழ்வு மேம்படும். மேலும். உழவுத் தொழில் செய்வோர் குறித்த புரிதலை மக்களிடம் உருவாக்க வேண்டும். உழவர்களின் நலிந்த வாழ்விற்கு அரசை மட்டும் பொறுப்பாக்கி மக்கள் பொறுப்பற்று வாழ்தல் கூடாது.உழவர்கள் சுயநலத்தில் சுருங்கி விடக்கூடாது, நுகர்வு கலாச்சாரத்தில் மயங்கி விடக்கூடாது என்பதை இவ்வாய்வுக் கட்டுரைச் சுட்டிக்காட்டுகிறது.

**உரம் பூச்சி மருந்துகளின் பயன்பாடு**

உலக மக்கள் தொகை பெருக்கத்தினால் உணவு தேவை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனால் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. உணவு உற்பத்தியை அதிகரிக்க பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, நீலப் புரட்சி என்ற பெயரில் துறைசார்ந்த நிபுணர்களால்: உரம், பூச்சி மருந்து, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதை ஆகியவற்றின் பயன்பாடு குறித்து உழவர் மக்களிடம் ஊக்குவிக்கப்பட்டது.

இதன் விளைவவாக **உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளால் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 30 லட்சம் மக்கள் பாதிக்கப்படுவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. இதில் குழந்தைகளும் விவசாயிகளும் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள். பூச்சிக்கொல்லிமருந்துகளின் பயன்பாட்டினால் அவை காற்றில் களந்து, உணவு சுவாசம் மற்றும் தோல் மூலமாக உள்ளே நுழைந்து, அதிக காலம் தங்கி, ஆபத்தை உண்டு பண்ணுகிறது. எண்டோசல்பான் பூச்சிக்கொல்லிமருந்தின் நச்சு தாய்ப்பாலில் அதிகம் இருப்பதாக ஆய்வு குறிப்பிடுகிறது. இவை புற்றுநோயை உண்டாக்குகிறது. (தாய்ப்பாலும் நஞ்சாகுமா?,ப.29). இச்சூழலில்,** நம்மாழ்வார் கூறிய இயற்கை விவசாயத்துக்கு ஊக்கம் அளித்து ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்கள் வகுத்து செயல்பட்டால் உழவுத்தொழில் மீட்டுருவாக்கம் செய்யவாய்ப்புள்ளது.

**நவீன இயந்திரங்களின் வருகை**

நவீன இயந்திரங்களின் வருகையால் உழவுத் தொழில் பெருத்த மாற்றங்கண்டுயிருப்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில் உழவு மாடுகள் உழவுத் தொழிலில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன. இதனால் எருஇடுதல் குறைந்து, உரமிடுதல் அதிகரித்திருக்கிறது. நிலத்தில் எருயிட்டு உழவு செய்வதனால் நிலத்திற்கும் மனிதர்களுக்கும் எந்த தீங்கும் விளைவதுயில்லை. உரம் இடுதலால் மண் மலடாகிறது. மேலும் பூச்சிகளின் தாக்கம் அதிகரிக்கிறது. இதனால் பூச்சிமருந்துகளின் தேவை அதிகரிக்கிறது. லாப நோக்கத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயலில் ஈடுபடும் பூச்சிக்கொல்லி மருந்து நிறுவனங்களாலும் உழவர்களிடம் போதுமான விழிப்புணர்வு இல்லாமாலும் முறையற்ற பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாட்டாலும் இயற்கை சூழல் மோசமடைந்து பல நோய்களை உண்டாக்கி உயிர் கொல்லியாக மாறிநிற்கிறது. இதனால் உணவுச் சங்கிலி முறையும் பெரிதும் பாதித்துள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

உழவர்கள் பயன்படுத்தும் இடுபொருட்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் அவர்களுக்குக் கட்டுப்படியான விலையில் வணிகர்கள் வாங்குவதும் இல்லை இடைத்தரகர்கள் அதை அனுமதிப்பதும் இல்லை. இவர்களின்

சூழ்ச்சி வலையில் சிக்கி சீரழிந்து போகிறார்கள் உழவர்கள். இச்சிக்கலுக்கு விடை காணாத வரை உழவர் வாழ்வில் வெளிச்சம் ஏற்படப் போவதில்லை.

**உலகில் எத்தனை இனங்கள் ஒன்றுபட்டாலும் ஒரே ஒரு இனம் மட்டும் எங்கிருந்தாலும் இரண்டு பட்டே நிற்கும். அந்த இனம் தான் நம் பெருமைக்குரிய தமிழினம். (எங்கே போகிறோம் நாம்,ப.185)** இச்சிந்தனையானது உழவர்களின் நிலைப்பாடு குறித்துச் சிந்திக்கவைக்கிறது.

**நிலமகள் நகுவாள்**

உழவுத்தொழில் செய்யக்கூடியவர்கள், தாமே முன்னின்று உழவுத் தொழில் செய்ய வேண்டும். அடுத்தவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு சோம்பி இருத்தல் கூடாது. அவ்வாறு சோம்பி இருந்தால் கணவன் தன் மனைவியைப் புறக்கணிக்கும்போது, மனைவியானவள் கணவனிடம் ஊடல் கொள்வதுபோல, நிலமகள் ஊடல் கொள்வாள் என்று வள்ளுவர் பெருந்தகை கூறுகிறார். மேலும், சோம்பலில்லாமல் உழவுத் தொழில் செய்வோருக்கு நிலமகள் வாரி கொடுப்பாள் என்றும் உழவுத்தொழிலை, பொறுப்புணர்வுடன் செய்யாமல், வறுமையில் உழன்று, என்னிடம் ஒன்றுமில்லை என்று புலம்புபவர்களைக் கண்டால் நிலமகள் தன்னுள் நகைப்பாள் என்று வள்ளுவர் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கதாக அமைகிறது.

**இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம் என்னும் நல்லாள் நகும் (கு.1040).**

**உழவர்கள் மனநிலையில் மாற்றம் தேவை**

உழவர்களைச் சுரண்டி கொழிக்கும் கூட்டம் ஒற்றுமையாக இருக்கும் பொழுது உழவர்கள் ஏன் ஒற்றுமையாக இருப்பதில்லை என்பதைச் சிந்தித்துபார்க்க வேண்டும். உழவகள் வாங்கும் பொருளுக்கு உற்பத்தியாளர் விலை நிர்ணையிக்கும் போது உழவகள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு யார் யாரோ? விலை வைக்கின்றார்களே அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். உற்பத்தி செய்த பொருளை அப்படியே விற்காமல் மதிப்புகூட்டுப் பொருளாக மாற்றி விற்பதற்கான மாற்றுச் சிந்தனையை ஆராய வேண்டும். உழவுத் தொழில் வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்காமல் உன்னதமான தொழில்தான் என்பதை சிந்தித்து காலத்திற்கேற்ற மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டு உழவுத் தொழிலை மீட்டுருவாக்கம் செய்வது சாலச்சிறந்ததாகும்.

**மீளுருவாக்க விவசாயம் தேவை**

உழவுத் தொழிலானது இயற்கையுடன் ஒன்றிருக்க வேண்டும். தற்போதைய விவசாய முறையானது மண் வளத்தையும் மனித வளத்தையும் பாழ்படுத்தி வருகிறது என்பது எதார்த்த உண்மை. எனவே உழவர்கள், விஞ்ஞானிகள், கொள்கை வகுப்பாளர்கள், நுகர்வோர்கள் என அனைவரும் உழவுத் தொழிலை மீட்டுருவாக்கம் செய்வது காலத்தின் கடமையாகியுள்ளது.

**மீட்டுருவாக்க விவசாயம் என்பது மண்ணின் ஆரோக்கியம், உணவின் தரம், பல்லுயிர் மேம்பாடு, நீரின் தரம், காற்றின் தரம் என அனைத்திலும் கவனம் செலுத்தும் ஒரு முழுமையான வேளாண் முறையாகும். இது மண்ணில் கரிமப் பொருட்கள், உயர்ச்சத்து, பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகரிக்கச் செய்து மண்ணின் வளத்தினை மேம்படுத்துகிறது. மண்ணில் நீர்ப்பிடிப்பு திறனையும் கரிம தேக்கத்தினையும் மேம்படுத்துகிறது. தற்போதைய தீவிர விவசாய முறை மண் சிதைவினை ஏற்படுத்தி தொடர்ச்சியான மண்வள இழப்புகளுக்கு வழிவகும் என்றும் உலகின் மண்வளம் அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு கூட உணவளிக்கும் வகையில் இல்லை என்றும் சர்வதேச விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நீரின் பயன்பாட்டையும் அதன் பயனுறு திறனையும் மேம்படுத்த மண்ணின் ஆரோக்கியத்தையும் அதன் ஊட்டச்சத்து திறனையும் மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். (ஜெய ராஜசேகர், தி, மீளுருவாக்க விவசாயம் தேவை,(தினமணி தலையங்க கட்டுரை, ப.7,22-01-2023}.**இச்சிந்தனையானது, விருப்பு, வெறுப்பு இல்லாமல் அறிவியல் கண்ணோட்டத்தில் உழவுத் தொழில் குறித்த தெளிவான பார்வையைச் சுட்டிக்காட்டி உள்ளது .மேலும் உழவுத் தொழிலின் சிக்கலை புலப்படுத்தி, தீர்வு நோக்கிய புரிதலை உருவாக்கி இருப்பது சிந்திக்க வைக்கிறது.

**முடிவுரை**

உழவுத்தொழில், உன்னதமான தொழில், உலக மக்கள் அனைவருக்கும் உணவு அளிக்கும் தொழில். எனவே உழவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள், என்று வள்ளுவர் கூறியிருப்பது எண்ணி மகிழத்தக்கது. இருப்பினும் உழவர்களின் வாழ்வு மற்ற தொழில் செய்வோர் களைவிடச் சிறப்புடையதாக அமையவில்லை என்பது நிதர்சனமான உண்மை.எனவே, நாம், ஒவ்வொருவரும் சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்று வள்ளுவர் கூறி யிருப்பதை உணர்ந்து, உழவுத் தொழில் செய்பவர்களை மதிக்க வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஆனால், நமது தேசத்தில் உழவர்களின் நடைமுறை வாழ்வை பார்க்கின்ற பொழுது இடைத்தரகர்கள் உழவர்களை சுரண்டிக் கொழுக்கிறார்கள் என்பது எதார்த்தமான உண்மையாக இருக்கிறது.. விளைநிலங்கள் ரியல் எஸ்டேட் தொழிலாக மாறுகிறது, மக்கள் தொகை பெருக்கம் ஒருபுறம் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. தொழிற்சாலைகள் பெருக்கம் மற்றொருபுறம், இப்படி பல்வேறு காரணங்களால்,

உழவுத்தொழில் ஒவ்வொரு நாளும் நலிந்து வருகிறது என்பது மறுப்பதற்கில்லை.இச்சூழலில், நாம் ஒவ்வொருவரும் வள்ளுவரின் திருக்குறளை படிப்பதோடு மட்டும் இருந்து விடாமல், உழவுத்தொழிலின் உன்னதத் தன்மையை உணர்ந்து உழவர்களுக்கு உறுதுணையாகயிருக்க வேண்டும்.மேலும், உழவர்களுக்கு மரபு வழி மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்த உழவு முறையை ஆளுவோர் உழவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அவர்களுக்கு தேவையான இடுபொருட்களைக் கட்டுப்படியான விலையில் கொடுத்து, ஊக்கப்படுத்த வேண்டும். உழவர்களும் காலத்திற்கு ஏற்ற மாற்றத்தினை புரிந்து கொண்டு, உற்பத்தி செய்வதோடு நிற்காமல், உற்பத்தி செய்த பொருளை மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்றி, சந்தைப்படுத்துவதில் முன்னெடுப்புகளைச் செய்தல் வேண்டும். ஆளுவோர் உழவர் சந்தை போன்ற விற்பனை அங்காடிகளை மேம்படுத்தியும், அதிகப்படுத்தியும் உழவர்கள் உற்பத்தி செய்த பொருளை உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுமதி செய்ய எளிமையான சட்ட திட்டங்களை உருவாக்கி ஊக்கப்படுத்த வேண்டும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரைச் சுட்டிக்காட்டுகிறது

**குறிப்பு நூல்கள்**


1. தமிழருவி மணியன்,.எங்கே போகிறோம் நாம் ,கற்பகம் ,புத்தகாலயம், சென்னை,முதற்பதிப்பு — 2018.
2. பரிமேலழர்(உ.ஆ,) திருக்குறள்,திருமகள் நிலையம், சென்னை, நன்காம் பதிப்பு -1998.
3. பழனித்துரை,க.,சாதாரண மனிதர்களைப் போற்றுவோம், நீ செஞ்சுரியின் உங்கள் நூலகம், இதழ் -10, மலர் -14, ஜனவரி -2023.
4. பழனித்துரை, க., தேடுவோம் மாற்றத்திற்கான இளைஞர்களை, நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம், மலர்- 14, இதழ்- 12, மார்ச் -2023.
5. பழனித்துரை,க. அறிவை மக்களாட்சிப்படுத்துவோம், தினமணி நடுக்கட்டுரை,15-3-2023.
6. மாணிக்கம்,பேரா. மறப்பது மனிதனின் இயல்பு நினைவுபடுத்துவது வரலாற்றின் கடமை, நீ செஞ்சுரியின் உங்கள் நூலகம், இதழ் -10, மலர் -14, ஜனவரி — 2023.
7. மணிக்கவாசகன்(உ.ஆ),புறநானூறு,உமா பதிப்பகம்,சென்னை- 600001. பதிப்பு - 1998.
8. வைத்தியலிங்கம் பா,.மருத்துவர், தாய்ப்பாலும் நஞ்சாகுமா?, நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் மாத இதழ், மலர் - 14, இதழ் - 12, மார்ச் -2023. ப.29.
9. ராஜசேகர், ஜெய, மீளுருவாக்க விவசாயம் தேவை, தினமணி தலையங்க கட்டுரை, ப.7.,22-01-2023
10. ஜெய்சங்கர், இரா. *மனசாட்சி உதிர்கின்றது.* சரவணா பிரிண்ட் சொல்யூஷன்ஸ், ஆதம்பாக்கம், சென்னை, 2017, முதற்பதிப்பு — 2017.

*Reference Books*

1. *Tamilaruvi Manian, Yenkae Pogirom Nam., Karpagam, Putthakalayam, Chennai, First Edition — 2018.*

2. *Parimelazhar(U.A.)Thirukkural, Thirumagal Nilayam, Chennai, Nangam Edition -1998.*

3. *Palanithurai, K., Sathaarana Manithairgalai Pottruvom, Your Library of the New Century, Issue -10, Malar -14, January -2023.*

4. *Palanithurai, K., Thaeduvom Madrathuirkana Elainkargalai, Your Library of the New Century, Malar- 14, Issue -12, March -2023.*

5. *Palanithurai, K. Aarivai Makkalachippaduthuvom, Dinamani Mid-article page seven 15-3-2023.*

6. *Manickam, Pera., Marapathu Manithanin Eyalbu Ninaivupaduthuvathu Varalarttrin Kadamai, p. 70. Your Library of the New Century, Issue -10, Malar -14, January - 2023*

7. *Manikkavasakan(U.A.), Uma Publishing House, Purananoor, Chennai- 600001. Edition - 1998.*

8. *Vaidyalingam P.,. Thaipalum Nanchaguma, New Century's Your Library Monthly Magazine, Malar - 14, Issue - 12, March -2023. P.29.*

9. *Rajasekhar, Jaya, Meeluruvakka Vivasaiyam Thevai, Dinamani Editorial Article, P.7.22-01-2023*

10. *Jaishankar ,R,. Manasachi Uthirkindrathu, Saravana Print Solutions, Adambakkam, Chennai, 2017, First Edition - 2017.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com